அடைந்துள்ளார். அவர் மீது வழக்கு தொடர ஏற்பாடாகிக் கொண்டிருக்கிறது. மேலும் புலன் விசாரணை தொடர்ந்து நடைபெறுவதன் காரணமாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கருத்துக்களின் அடிப்படையிலேயே இந்த புலன் விசாரணை தொடர்ந்து நடத்தப்படும் என்றும் கூறிக் கொள்கிறேன், சில உண்மைகள் கிடைக்கக் கூடும். அந்த உண்மைகளின் அடிப் படையிலே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, உண்மையான குற்ற வாளிகள் கண்டுபிடிப்பதற்குரிய முயற்சிகளை அரசு எடுக்கும் என்பதைக் கூறிக் கொண்டு, ஆகவே இது குறித்து மேலும் விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதால், அவையை ஒத்தி வைக்க வேண்டிய தேவையில்லை என்று கூறிக் கொள் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னவர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, இது குறித்து மேலும் விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்ற காரணத்தால், இதற்கு அனுமதி மறுக்கப் பெறுகிறது.

(3) கவன ஈர்ப்பு.

மதுரை மாவட்டம், குண்டாற்றின் குறுக்கே அணைகட்டுதல்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். இராமநாதபுரம் மாவட்டத்தைச் சுற்றி கமுதி, கடலாடி, முதுகுளத்தூர் போன்ற பகுதிகளில் எப்படி வறட்சி பாதிக்கப்பட்டிருக்கிறதோ, அதைப் போலவே மதுரை மாவட்டத்தின் திருமங்கலம் தொகுதியிலும் வறட்சி நிலவி வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் எடுத்து வந்த இந்தப் பிரச்சினை, ஏற்கெனவே இதற்கு முன்னாலே சட்ட சபையிலே எழுப்பப்பட்டதற்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் கொடுத்து விட்டார்கள். இப்போது திரும்பவும் 54 வது விதியின் கீழ் கொண்டு வரப்படுமேயானால் அந்தப் பகுதியில் இல்லாத பிரச்சினையை இருப்பதுபோன்ற தோற்றம் கொடுத்து ஒரு பதட்டம் உண்மையிலேயே அந்தப் பகுதியில் உருவாக்க இது ஏதுவாகும். ஆகவே........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வ. சத்தியமுர்த்தி என்ன கேட்கப் போகிறார், அதற்கு மாண்பு மிகு அமைச்சர் அவர்கள் என்ன பதில் சொல்லப் போகிறா என்பதை பார்த்துவிட்டு பிறகு பேசலாம். அனுமானம் தேவை யில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1982 மார்ச் 22]

திரு. வ. சத்தியமூர்த்தி: தலைவர் அவர்களே, ''மதுரை மாவட்டத்தில் குண்டாற்றின் குறுக்கே அணை கட்ட நடவடிக்கை எடுப்பதால், இராமநாதபுரம் மாவட்டம் கமுதி, கடலாடி, முதுகளத்தூர் போன்ற பகுதிகளிலுள்ள விவசாயிகளிடையே நிலவும் கவலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டம், சென்னம்பட்டி கிராமத்தில் குண்டாற்றின் குறுக்கே ஒரு அணைக்கட்டு கட்டும் திட்டம் தலைமைப் பொறியாளரால் ஆய்வு செய்யப்பட்டது. திட்ட அறிக்கை தலைமைப் பொறியாளர் (ஆய்வு) அவர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.

2. இப்பகுதியில் கிடைக்கும் நீரின் அளவு, இப்பொழுது பயன்பெறும் நிலங்களின் அளவு ஆகிய முழு விவரங்கள் அடங்கிய அறிக்கை தலைமைப் பொறியாளரிடமிருந்து பெறப்படும். இந்த விளக்க அறிக்கை கிடைத்தபின், இவ்வணைக்கட்டைக் கட்டுவதனால் மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டுள்ள பகுதியில் ஏற்படக்கூடிய விளைவுகளை நன்கு ஆய்ந்து அதன் பிறகே அரசு முடிவெடுக்கும்.

திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதுகளத்தூர், கமுதி, கடலாடி போன்ற பகுதிகளில் குண்டாறு தவிர வேறு ஆறே கிடையாது. மழைக்காலங்களில் மதுரைப் பகுதிகளில் மழைப் பெய்தாலும், இந்த ஆற்றின் வழியாகத்தான் தண்ணீர் வரவேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே, இந்த ஆறு உற்பத்தியாகும் இடத்திலே அந்த அணையைக் கட்டுவதால், அங்கேயுள்ள விவசாயிகள் விவசாயத்தையே விட்டுவிட வேண்டிய அவசியம் ஏற்படும். ஆகவே அதன் அடிப்படையில் அணையைக் கட்ட தலைமைப் பொறியாளருக்கு அறிவுறுத்த அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைமைப் பொறியாளர் அவர்கள், சுதந்திரமாக அது பாதிக்கப்படுமா? படாதா? என்று அறிக்கை

கொடுத்தபிறகுதான் பரிசீலிக்க வேண்டுமே தவிர, பாதிக்கப்படும் என்று நாமாகவே முடிவு செய்து தலைமைப் பொறியாளருக்கு அறிவுரை கூறுவது சரியல்ல. அது குறித்த விளக்க ரிப்போர்ட்டுகளைத்தான், அந்த அடிப்படையில் நாம் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள் சொன்னதைப் போல் திருமங்கலம் பகுதியும் வறண்ட பகுதிதான். மேலும் கிழக்கு இராமநாதபுரம் பகுதியிலே உள்ள அருப்புக்கோட்டையும் வறண்ட பகுதிதான். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லக்கூடிய முதுகளத்தூர் பகுதியும் வறண்ட பகுதிதான். இந்தப் பகுதிகள் எல்லாம் பாதிக்கப்படாத வகையிலேதான் இந்தத் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்று நான் சொல்லி இருக்கிறேன். ஆகவே திரும்பவும் அந்த அடிப்படையிலேதான் ஆய்வு செய்யச் சொல்லி இருக்கிறோம். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவலை என்னவென்றால் மதுரை மாவட்டத்திலே இந்த அணை கட்டப்படுமேயானால் மழை பெய்யும் நீர் எல்லாம் அங்கே தேக்கப்பட்டுவிடும், எனவே இந்தப் பகுதிக்கு தண்ணீர் கிடைக்கக்கூடிய வாய்ப்பு இல்லாமல் போய்விடும் என்பதுதான். ஆனால் கீழ்ப் பகுதிகளிலே உள்ள மக்களின் நலன்களும் பாதுகாக்கப்படும். ஆகவே அதுபற்றி எல்லாம் நன்கு ஆய்வு செய்யப்பட்டதற்குப் பிறகுதான் இடங்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே ஏற்கனவே பயன் பெற்று வருகின்ற அந்த ஸ்டெபிலைசேஷன் பாதிக்கப்படாத வகையிலேதான் நிச்சயமாக இந்த அரசு முடிவு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

(4) இறுதித் துணை நிதி அறிக்கை, 1981–82.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, 1981–82 ஆம் ஆண்டுக்குரிய இறுதித் துணை மதிப்பீடுகளை* இம் மாமன்றத்தில் வைக்க முன் வந்துள்ளேன். இவற்றில் சேர்க்கப்பட்டுள்ள மொத்தம் ரூ. 502.67 கோடியில், ரூ. 235.73 கோடி வருவாய்க் கணக்கிலும், ரூ. 266.94 கோடி மூலதன, கடன் கணக்குகளிலும் வருகின்றன. பல்வேறு கோரிக்கைகளில் சேர்க்கப்பட்டுள்ள தொகை பற்றிய விவரங்களும் கூடுதல் நிதி ஒதுக்கத்திற்கான காரணங்களும் இத்துடன் இணைத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன. முதல் துணை மானியக் கோரிக்கை வைக்கப்பட்ட பின்னர் அனுமதிக்கப்பட்ட செலவினங்களும் இப்போதுள்ள நிதி ஒதுக்கத்திற்கு

---

*நிதி அமைச்சரின் உரையை ஆங்கிலத்தில் 358-359-ம் பக்கங்களில் இணைப்பு I-ல் காண்க.